# பாடத்திட்டத்தைப் பூர்த்தி செய்வதற்குப் பரிந்துரைக்கப்பட்ட வேலைத்திட்டம்

## தரம் ஐந்து (முதலாம் தவணை)

## 2022

இரண்டாம் தேசிய மொழி – தமிழ்

முன்பிள்ளைப் பருவவிருத்தி மற்றும் ஆரம்பக் கல்வித்துறை
தேசிய கல்வி நிறுவகம்
மஹரகம

**நாட்டின் இடர் சூழ்நிலை காரணமாக பாடசாலை மாணவர்களுக்குக் கிடைக்கப்பெறாத பாடசாலை நாட்களின் பாடத்திட்டத்தினை நிறைவு செய்து கொள்வதற்குரிய அறிவுறுத்தல் திட்டம்.**

நாட்டின் COVID – 19 தொற்று இடர்காலம் மற்றும் இன்றைய நாட்டின் சமூக பொருளாதார இடர் சூழ்நிலை காரணங்களால் 2021, 2022ம் ஆண்டுக்கான தரம் 01 தொடக்கம் தரம் 05 வரை ஆரம்பப்பிரிவு கல்விப் பிரிவில் கற்கும் மாணவர்களை கருத்திற் கொள்ளும் போது இவர்கள் கல்வி கற்கும் காலத்தை இழந்துள்ளார்கள் என்பது தகவல் பகுப்பாய்வு மதிப்பீடுகள் மூலம் உறுதி செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறு மாணவர்கள் இழந்துள்ள கற்றலுக்குரிய காலவேளைகளின் அடிப்படையினை நோக்காகக் கொண்டு அக் கல்வி ஆண்டுக்கான அத்தியவசியக் கற்றல் தேர்ச்சிகளை அதனடிப்படையில் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளை மேற்கொள்ள எதிர்பார்க்கப்படுகின்றது.

அதனடிப்படையில் ஆரம்பக் கல்விப் பிரிவின் 1 – 5 வரையான தரங்களுக்கு முதலாம் தவணைக்கான கற்பித்தல் உள்ளடக்கங்களின் அத்தியவசியமான பகுதிகள் முன்வைக்கப்ப டுகின்றன. இவ்வத்தியவசியமான பகுதிகள் நிறைவேற்றப்படும் போது இரண்டாம் தவணைக்குரிய கற்றல் சந்தர்ப்பங்களைப் பெற்றுக் கொடுக்க இலகுவாக அமையும் என்பதை மேலும் தெரிவித்துக் கொள்ளலாம்.

எவ்வாறாயினும் நாம் முன்வைக்கும் கருத்து யாதெனில், முதலாம் தவணைக்குரிய மிகவும் அத்தியவசியமான பாடப்பரப்புக்கள் மாணவர்களுக்கு பெற்றுக் கொடுத்திருப்பின் அவற்றை விடுவித்து அவசியமான தேவையான பாடப்பரப்பில் இருந்து ஆரம்பிக்கலாம்.

ஒவ்வொரு பாடப்பரப்புக்கள் சம்பந்தமாக தேவையான கால அட்டவணையில் மாணவர்கள் எண்ணிக்கைக்கு ஏற்ப சுகமான முறையில் மாற்றங்கள் ஏற்படுத்திக்கொள்ள சுதந்திரமுண்டு. மாற்றங்களை ஏற்படுத்த வாய்ப்புத் தரப்பட்டிருப்பினும் பாடப்பரப்புக்களை நிறைவு செய்வதற்குரிய பொறுப்பு ஆசிரியர்களாகிய உங்களையே சாரும்.

ஒவ்வொரு பாடத்திற்குமான பொது ஆசிரியர் வழிகாட்டியின் படி அத்தியவசியமானது எனக் குறிக்கப்பட்ட பாடப்பகுதிகள் மாத்திரம் இங்கு உள்ளடக்கப்பட்டிருக்கின்ற தருவாயில் அத் தவணைக்குரியவைகளை பாடப்பரப்பில் அத்தியவசியமான செயற்பாடுகள் மிகவும் இலகுவான முறையில் தெளிவு படுத்தப்பட்டு பின் வீட்டிலிருந்து கற்றல் செயற்பாட்டில் ஈடுபடுத்த உங்களால் முடியுமாயிருத்தல் வேண்டும்.

தெளிவு படுத்தப்பட்ட செயற்பாடுகளை வீட்டில் இருந்து செய்வித்தலின் போது மாணவர்கள் எந்த விதத்திலும் இடர் நிலைக்குத் தள்ளப்படக்கூடாது என்பதனையும் கவனத்தில் கொள்ளுதல் வேண்டும்.

எவ்வாறாயினும் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளின்போது சுமூகம், பாதுகாப்பு, மகிழ்ச்சி என்பவற்றுடன் மாணவர்களை ஒன்றிணையுங்கள்.

அதன்படி இலங்கை வாழ் ஆரம்பப் பிரிவில் கற்கும் மாணவச் செல்வங்களின் கற்றல் நடவடிக்கைகளை உறுதியுடன் பலனைப் பெற்றுக்கொள்ளும் நோக்கில் இவை அனைத்தையும் நிறைவு செய்ய எம் அனைவருக்கும் இறைவனின் ஆசியும் அருளும் கிடைக்கப் பிரார்த்திப்போம்.

| இரண்டாம் தேசிய மொழி - தரம் 05 | | | | |
|---|---|---|---|---|
| **தேர்ச்சி** | **உள்ளடக்கம்** | **செயற்பாடு** | **பக்க எண்** | **நேரம்** |
| • 16-20 வரையிலான எண் பெயர்களைச் சிங்கள மொழியில் கூறுவார். | • 16 දාසය (Dh)தஹஸய - பதினாறு<br>• 17 දාහත (Dh)தாஹ(த்)த - பதினேழு<br>• 18 දහඅට (Dh)தஹஅ(ட்)ட - பதினெட்டு<br>• 19 දහනවය (Dh)தஹநவய - பத்தொன்பது<br>• 20 විස්ස விஸ்ஸ - இருபது | 1,3 | 253,254 | 2 மணித்தியாலம் |
| • 10-100 வரையிலான பத்தின் மடங்குகளின் எண் பெயர்களைச் சிங்கள மொழியில் கூறுவார். | • 10 දහය (Dh)தஹய - பத்து<br>• 20 විස්ස விஸ்ஸ - இருபது<br>• 30 තිහ திஹ - முப்பது<br>• 40 හතලිහ ஹ(த்)தலிஹ - நாற்பது<br>• 50 පනහ பணஹ - ஐம்பது<br>• 60 හැට (ெ)ஹ(ட்)ட - அறுபது<br>• 70 හැත්තෑව (ெ)ஹத்(ே)தவ - எழுபது<br>• 80 අසූව அசூவ - எண்பது<br>• 90 අනූව அனூவ - தொண்ணூறு<br>• 100 සියය சியய - நூறு | 1,2,3 | 255,256 | 3 மணித்தியாலம் |
| • அன்றாட உரையாடலின் போது இட அமைவைச் சரியாகக் குறிப்பிடுவதற்காகப் பொருத்தமான பதப் பிரயோகங்களைப் பயன்படுதடதுவார். | • උඩ/උඩට/උඩින් உட/ உட(ட்)ட/ உடின் - மேலே<br>• යට/යටට/යටින් /බිමින්/ බිම ய(ட்)ட/ ய(ட்)டட/ ய(ட்)டின் (B)பிமின்/(B)பிம - கீழே<br>• ඇතුළේ/ ඇතුළට/ ඇතුළෙන් எ(த்)துலே/எ(த்)துல(ட்)ட/ எ(த்)துலென் - உள்ளே<br>• එළියේ/එළියට/එළියෙන් எலியே/ எலிய(ட்)ட/ எலியென் - வெளியே | 1,2,3 | 257,258,259 | 2 மணித்தியாலம் |
| மொத்த நேரம் | | | | 7 மணித்தியாலம் |